<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# M.C.O.P. No.103/2022

PW1 லட்சுமி நாள் 29.08.2024

**<u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த விவரத்தை ஒருவர் என்னிடம் நேரில் சொன்னார். அவரும் எவ்வாறு விபத்து நடந்தது என்று சொல்லவில்லை. விபத்து நடந்த விவரத்தை சம்பவ இடத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள், அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. என் கணவர் சென்ற இருசக்கர வாகனம் அவருடையது. என் கணவர் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்தின் மீது கார் தான் மோதியது. மனு போடுவதற்கும், வாக்குமூலத்தில் உள்ள விவரத்தை நான் தான் சொன்னேன். லோடுஆட்டோ தவறான இடத்தில் நிறுத்தியிருந்ததாகவும், என் கணவர் அதில் மோதிவிட்டதாகவும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். விபத்து நடந்த இடத்தின் அருகில் ஒரு வீட்டில் விசேசம் நடந்து கொண்டிருந்தது. அங்கு கூட்டம் அதிகம் இருந்தது. அந்த இடத்தில் டீப் லைப் கட்டியிருந்ததா என்று நான் பார்க்கவில்லை. அந்த இடத்தில் வேகமாக வரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் வேலைக்கு செல்லாமல் சும்மா தான் இருந்தார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் மது அருந்திவிட்டு சென்றார் என்றால் சரியல்ல. அவர் இறந்ததற்கு தலைகாயம் காரணம் என்று தெரிந்து கொண்டேன். அவர் தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. அவர் வருமானத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் மட்டும் தான் வீட்டில் சம்பாதிக்கக்கூடிய நபர் என்றும் என் கணவர் சம்பாதிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆட்டோ தான் விபத்திற்கு காரணம் என்றும், பொலிரோ வாகனம் விபத்திற்கு காரணம் அல்ல என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பொலிரோ வாகனம் மெதுவாக தான் வந்தது என்றால் சரியல்ல. நான் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி பொலிரோ வாகனம் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கவுன்சிலரிடம் சொல்லி பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.